# வேர்கள்

தி. வேல்நம்பி



உ

தி. வேல்நம்பி

எண்ணச் சிறகுகளின்

வண்ணப் பறப்புக்கள்

# வேர்கள்

# "வேர்கள்" கவிதைத் தொகுதி

*ஆசிரியர் :* தி. வேல்நம்பி

*அணிந்துரை :* பேராசிரியர் அ. சண்முகதாஸ்
*பீடாதிபதி, யாழ். பல்கலைக் கழகம்*

*ஆசியுரை :* திரு. க. தேவராஜா
*தலைவர்,*
*வணிகத்துறை, யாழ். பல்கலைக் கழகம்*

*வாழ்த்துரை :* பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
*துணைவேந்தர்,*
*யாழ். பல்கலைக் கழகம்*

*அட்டைப்படம் :* திரு. க. வரதராஜன்
*ஆசிரிய ஆலோசகர்*

*அச்சுப்பதிப்பு :* ஸ்ரீ மீனாட்சி அச்சகம்
*நல்லூர்.*

*வெளியீடு :* தமிழ் மன்றம்
*யாழ். பல்கலைக் கழகம்*

*பதிப்புரிமை :* ஆசிரியர்

# அணிந்துரை

வணிகத்துறை விரிவுரையாளராகிய திரு. தி. வேல்நம்பி தமிழ் இலக்கிய உலகுக்குப் புதியவரல்லர். சுவையான தமிழிலே சொற்பொழிவாற்ற வல்லவர். 'வேர்கள்' என்னும் இக் கவிதைத் தொகுதியூடாக அவரை ஒரு கவிஞராக இனங் காணுகின்றோம்.

''நீ எந்தன் உயிரல்லவோ'' என்னும் கவிதை அவருடைய தொகுதிக்குத் தமிழ் வாழ்த்தாக அமைகின்றது. காதல், சமூகம், சமகால நிலைமைகள் என்பன பற்றியெல்லாம் பாடியுள்ளார், சில வரலாற்று நிகழ்வுகளை வேல்நம்பி கவிதைகளாக வடித்துத் தந்துள்ளார். ''வன்னிப்பயணம்'' ''ஏன் இந்தக் கோலம்'' என்னும் கவிதைகளை எடுத்துக்காட்டுக்களாகக் காட்டலாம்.

காதல் பாடல்களூடாக வேல்நம்பி எதையோ வெளிப்படுத்த முயல்கிறார் ஆனால் அது தெளிவாக்கப்படவில்லை, அரசியல், சமூக நிலைகள் தொடர்பாக அவருக்கு ஏற்படும் சீற்றம் நியாயமானதே. வணிகமாணி ஒருவர் தமிழ்க்கவிதை எழுதும்போது தமிழ்மொழி எல்லாவிடங்களிலும் கைகொடுக்குமென எதிர்பார்க்க முடியாது. எனினும்

''சொர்க்கத்தில் நிச்சயித்த
கல்யாண மாலையின்று
ரொக்கத்தில் நிச்சயமாம்
நிலைகெட்ட காலமாச்சே''

போன்ற கவிதைஅடிகள் தொகுதியிலே இடம் பெறுகின்றன.

வேல்நம்பி ஓர் இளங் கவிஞர். மேலும் தரமான. மிகச் சிறந்த கவிதைகளை அவர் இயற்ற வல்லவராக வேண்டும். இக் கவிதைத்தொகுதி அவரை எம்மக்கள் நடுவே ஒரு கவிஞராக நிச்சயமாக அறிமுகஞ் செய்துள்ளது. இது அவருடைய எதிர்கால ஆக்கங்களுக்கு ஊக்கமளிப்பதாயுள்ளது.

— பேராசிரியர் அ. சண்முகதாஸ்
கலைப்பீடாதிபதி
யாழ். பல்கலைக் கழகம்

# ஆசியுரை

தற்கால நவீன உலகில் மனிதனின் ஆக்கங்கள் வர வேற்கப்படுகின்றன. அதே நேரம் மனிதனும் தான் சார்ந்திருக்கும் துறையில் மட்டுமல்லாது வேறு துறைகளிலும் தன் ஆளுமையை வளர்க்க வேண்டுமென ஆர்வம் கொண்டுள்ளான். உற்பத்தி பன்முகப்படுத்தப்படுவதுபோல் அறிவும் பன்முகப் படுத்தப்படவேண்டும். என்பது எல்லோரதும் விருப்பாகும். அந்த வகையிலேயே திரு. தி. வேல்நம்பி வணிகத்துறை சார்ந்தவராக இருந்தாலும் தமிழ் மொழிமீதும், கவிதை மீதும் அளவு கடந்த பற்றும், பாசமும் கொண்டவராக விளங்குகின்றார்.

திரு. தி. வேல்நம்பி 1995-ம் ஆண்டு முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வணிகத்துறையின் விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகின்றார். அவரால் வெளியிடப்படும் "வேர்கள்" பெயர்கொண்ட கவிதைத்தொகுதி அவரது மொழியறிவுக்கும், தமிழ்மொழி மீதான ஆற்றலுக்கும் எடுத்துக்காட்டாகும். வர்த்தகத்திலும், கணக்கியலிலும் காட்டிவரும் திறமை போன்றே அவரது கவிதையின் திறமையும் அமைந்துள்ளது. அவரது திறமையை வெளிக்காட்டும் மேலும் பல கவிதைத் தொகுதிகளை அவர் எதிர்காலத்தில் வெளியிடுவார் என்ற நம்பிக்கை எமக்குண்டு. அவரது பணி சிறப்பதற்கு எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

— க. தேவராஜா
தலைவர்
வணிகத்துறை,
யாழ். பல்கலைக் கழகம்

# வாழ்த்துரை

காலஞ்சென்ற ஓய்வூதியர் (கல்வித் திணைக்களம்) செல்லையா திருநாவுக்கரசு அவர்களுடைய ஞாபகார்த்தமாக அவரது புதல்வன் திரு. வேல்நம்பி அவர்களால் "வேர்கள்" எனும் இக் கவிதைத் தொகுதி வெளியீடு செய்யப்படுவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சிகொள்கின்றேன். காலத்துக்குக் காலம் எழுதப்பட்டுப் புதினப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டதும், பிறவுமான கவிதைகளைத் தொகுத்து வெளிவரும் இவ்வெளியீடானது இரண்டு வழிகளில் முக்கியத்துவம் பெறுகின்றது.

* திரு. வேல்நம்பி அவர்கள் ஒரு வர்த்தகப் பட்டதாரியாக இருந்தபோதிலும் தமிழ்மீது அவருக்குள்ள பற்றையும், அவரது தமிழ்ப் புலமையினையும் வெளிப்படுத்துதற்கு உதவியாக அமைகின்றது.

* "தந்தை மகற்காற்றும் உதவி - அவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

என்னும் வள்ளுவர் வாக்குக்கிணங்க தன்னைச் சபையில் முந்தியிருக்கச் செய்த தந்தையின் மாண்புறு செயலினை மனதில் பதிப்பது மகன் தந்தைக்குச் செய்யும் உதவியாக அமைகின்றது.

பலர் எவ்வளவோ ஆற்றல் உள்ளவர்களாக இருந்த போதும், எத்தனையோ எழுத்தாக்கங்களை எழுதிய போதும் அவை வெளியீடு செய்யப்படாத காரணத்தினால் அவற்றைப் பிறர் அறிந்துகொள்ள முடியாது போவதுண்டு. அல்லது நெருங்கிய சில நண்பர்களுக்கு மட்டுமே தெரிந்துகொள்வதுண்டு. எனவே இவ் வெளியீட்டின்மூலம் வேல்நம்பி அவர்கள் தன்னை வெளியுலகுக்குக் கொண்டுவருவதுடன், கவியுலகில் முக்கியமான ஒருவராக தன்னை நிலைநாட்டவும் முடியும். மேலும்பல கவிதைத் தொகுதிகளை ஆக்கக்கூடிய உத்வேகத்தை அவர் பெறவேண்டும் என்பது என்னுடைய அவா.

இத்துறையில் கிடைக்கும் அனுபவம் மற்றும் துறைகளிலும் நூல்களை எழுதுவதற்கு உந்து சக்தியாக அமையும் என்பது எனது திடமான எண்ணமாகும். அவரது முயற்சிகள் என்றும் பாராட்டத்தக்கவை.

— பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
துணை வேந்தர்,
யாழ். பல்கலைக் கழகம்.

உ

# சிந்தனைச் சிலிர்ப்பு

மிக வேகமாக வளர்ந்துவரும் இன்றைய உலகில் இலக்கியமும் வளர்ச்சியடைந்து செல்கின்றது. இத்தகைய இலக்கியங்களினூடாக எத்தனையோ காரியங்களைச் சாதித்து விட முடியும். குறிப்பாக எமது பண்பாடு, பழக்க வழக்கங்கள், நாகரிகம் என்பனவற்றை வெளிப்படுத்துவதற்கும்; அரசியல், சமூக சீர்கேடுகளைச் சுட்டிக் காட்டுவதற்கும். அதனூடாகச் சமூகத்தில் ஒருவித மாற்றத்தினையும், எழுச்சியினையும் ஏற்படுத்துவதற்கும் இலக்கியங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. இதன் காரணமாகவே ஒரு எழுத்தாளன் சமூகத்தில் மிகப் பிரதானமானவனாகக் கருதப்படுவதுடன், அவனது எழுதுகோல் போர்க்களத்தில் நிற்கும் வீரனொருவனின் ஆயுதத்திற்குச் சமனானதாகவும் கருதப்படுகின்றது.

முழுமையான தமிழறிவு இல்லாத போதிலும் தமிழ்மீது எனக்கிருந்த அலாதிப் பிரியத்தின் காரணமாகவும் சமூகத்தில் இடம்பெறும் சில நிகழ்வுகளைக் கண்டு மனம்பொறுக்க முடியாது அதனை வெளிக் கொண்டுவரவேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாகவும் இக் கவிதைத் தொகுதி வேர்விடுகின்றது எனது தந்தையின் ஓராண்டு தினத்தை நினைவு கூரும் விதத்தில் வெளிவரும் இத்தொகுதி எனது கன்னி முயற்சியாக இருப்பதனால் தவறுகள் பலராலும் பொறுக்கப்படும் என நம்புகின்றேன்.

கவிதைகளிலே மிகப் பிரபல்யம் பெற்ற மரபுக் கவிதையானது முழுமையான இலக்கிய வரம்புக்குட்பட்டதாகவும், சந்தம், இனிமை, யாப்பு மிகுந்ததாகவும் இருந்தாலும் அண்மைக் காலத்தில் புதுக்கவிதைகள் பெரிதும் வளர்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும் இவற்றுக்கிடையே வேறுபாடு காண நான் விரும்பவில்லை. இந்த வகையில் பல புதுக் கவிதைகளையும், ஓரிரு மரபுக் கவிதைகளையும் சுமந்துகொண்டு இக் கவிதைத் தொகுதியான 'வேர்கள்' வெளிவருகின்றது.

அரசியல், சமூகம், காதல் என்ற கோணங்களில் வெளி வரும் கவிதைகள் சமகால நிலைமைகளையும், சமூகத்தில் காணப்படும் சில முக்கியமான அம்சங்களையும் வெளிப்படுத்திக் காட்டக் கூடியளவுக்கே வெளிப்படுத்தியிருக்கின்றது. ஒரு சில கவிதைகள் வாழ்வில் ஏற்பட்ட சம்பவங்களை விபரித்தாலும், அநேகமானவை சமுதாயத்தில் நிலவும் உண்மைச் சம்பவங்களைச் சித்தரிக்கும் வகையில் கற்பனை ரீதியில் எழுதப்பட்டவையாகும்.

இவ்வளவு காலமும் புதினப் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் புதுவையான், புதுவை நம்பி, புதுவை திருநாவன் என்ற பெயர்களில் எழுதிய யான் இன்று இத்தொகுதியைச் சொந்தப் பெயரில் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இத் தொகுதிக்குப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் அணிந்துரையையும், வணிகத்துறைத் தலைவர் திரு தேவராஜா அவர்கள் ஆசியுரையினையும், பேராசிரியர் பொ பாலசுந்தரம்பிள்ளை (துணை வேந்தர்) அவர்கள் வாழ்த்துரையினையும் வழங்கியிருக்கிறார்கள். பல இன்னல்களுக்கு மத்தியிலும் இதனை வெளியிடுவதற்கு உதவிய இவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் இதனை வெளியீடு செய்யும் யாழ், பல்கலைக்கழக தமிழ் மன்றத்துக்கும், இந் நூலை அழகுற அச்சில் பதித்துத் தந்த ஸ்ரீ மீனாட்சி அச்சகத்தினருக்கும், வேர்களை அட்டையில் பொலிவுறச் செய்த ஆசிரிய ஆலோசகர் திரு க. வரதராஜன் அவர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

இடப் பெயர்வுகள் எனது பல ஆக்கங்களை விழுங்கிய போதிலும் உங்களுக்குத் தரும் கவிதைகள் இவ்வளவோடு நின்றுவிடாது மேலும் தொடரும்...

— கி. வேல்நம்பி

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.



உள்ளத்து உணர்வுகளை
கிள்ளித் தெளித்திடும்
எழுது கோல் என் ஆயுதம்.

விழுது போல் படர்ந்திடும்
“ வேர்கள் ” பரப்பியே
“ வேல் ” நம்பி யான்
எழுதிய கவிதைகள்
எந்தைக்குச் சமர்ப்பணம்.

# மௌன விருட்சம்

விண்ணை முட்டும்
மௌன விருட்சமே
நீ...
என்னை யீன்றாய்
ஏற்றம் தந்தாய்
விதையாகி மரமாகி
பூவாகிக் காயாகி
கனியாக...
ஆசை கொண்டாய்
இனித்திட்ட கனியாயும்
புசித்திட நீ...
சிதையாகிப் போனதென்னே.

# நாடும் வரமீவாய்

வல்ல கணபதியே வள்ளலே விநாயகனே
நல்ல கவியெழுத நாடும் வரம்கேட்பேன்
இல்லை யெனக்கென்று இறுக்காதே நீ
நல்ல வரமீந்து நாடுமெனைக் காப்பாய்.

# நீ எந்தன் உயிரல்லவோ

நீ யெந்தன் உயிரல்லவோ
நீயின்றி நான் வாழ்வதோ
தேனுந்தன் மொழியல்லவோ
தெவிட்டாத இன்பத்தை யார் தந்ததோ

பாவலர் காவலர் கைபட்டாயோ
பாரினில் மங்காத புகழ்கொண்டாயோ
சங்கம் மடிதவழ்ந்து சீர் பெற்றாயோ
சந்தமா யென்நெஞ்சில் இடம் குடிகொண்டாயோ

மூவேந்தர் கைக்கொள்ள முன்வந்தாயோ - என்
மனக்கண்ணில் பெண்ணாகத்தான் நின்றாயோ
பாரதி பாடிடப் புகழ்கொண்டாயோ - என்
பாவாடைக்குள் நீயும் உயிரானாயோ

அன்பே அன்பே அன்னைத் தமிழே
நீ யெந்தன் உயிரல்லவோ
நீயின்றி நான் வாழ்வதோ.

## கூலி வேர்கள்

தேயிலைத் தோட்டம் முதல்
தொழிற்சாலை வரை
உறிஞ்சி யெடுத்த
ஊழியர் இரத்தத்துக் கீடாகக்
கொடுக்கப்படும் சன்மானம்

கசக்கிப் பிழிந்து
வாரியெடுத்த
உடலில் சிந்தும்
வியர்வைத்துளியை
விசியெடுக்கும் விசிறிக்காசு

முதலாளித்துவ அதிகாரத்தின்
மூர்க்கத் தனத்தால்
சுரண்டி எடுத்த
பெண்கள் கற்புக்குப்
பேசிடும் விலை

பயிற்சித் தொழிலில்
பட்டதாரியின்
யானைப் பசிக்காய்
எம்மரசளிக்கும்
சோளப் பொரியிது

இவர்கள் தானே
எங்கள் மண்ணின்
ஆணி வேர்கள்

முற்றி முதிர்ந்த மரத்தின் பழத்தை
ருசிக்க நிற்கும் மனித இனமே
மரத்தின் கீழே ஓடுகின்ற
வேர்கள் தன்னை
எண்ணிப் பார்க்க மறப்பதேனோ ?

## வன்னிப் பயணம்

கால்கள் கடுக்கத் தொடர்ந்த தென்பயணம்
ஷெல்கள் வெடிக்க அதிர்ந்ததென் உள்ளம்
வயிறு கொதிக்க வெறுத்தது வாழ்வு
வயங்கி யுள்ளம் வழிந்தது சோகம்

கட்டிச் சேர்த்த பொருட்கள் கரையில்
தொட்டுப் பார்த்த மனையாள் தொலைவில்
சற்றுமுன் கதைத்த அன்னார் மண்ணில்
உற்றுப் பார்க்க...? தொடர்ந்தது பயணம்

கச்சாய் மில்லும் கதறியழுதது
முச்சாய் கண்ணீர் மாமரம் விட்டது
தனித்த என்கால்கள் தடம்பிப் புரண்டது
தந்தை தாயைத் தேடி நடந்தது

முற்றாய் மைல்தாள் மூன்று கொடுத்து
ஏற்றிய வண்டிப் பொருட்கள் அழிந்தது
கற்றுத் தேறக் கைதந்த நூல்கள்
முற்றும் பிரிந்து மூச்சு விட்டதால்
சுற்றி வந்து என்னைச் சுட்டது

வெய்யில் வாட்ட விண்ணும் வெடித்தது
கையில் உயிராய்ப் பயணம் தொடர்ந்தது
தண்ணீர்த் தாகம் தவிப்பைத் தந்தது
கண்ணீர்கூட மரத்த உளத்தில் உகுக்க மறுத்தது

கட்டி வந்த கதலிக் குலைகள்
காயா யிருந்தும் வயிற்றை நிறைத்தது
கசக்கிக் கசக்கிக் கைதான் சோர்ந்தும்
விசிக்கி யெறிய மனம்தான் மறுத்தது

வெள்ளி சனியொடு ஞாயிறானது
துள்ளி யேறிடப் படகு விரைந்தது
அலைகடல் மீதிலே படகிடை நாங்கள்
தலை சுழன்றும் தொடர்ந்தது பயணம்

விண்ணிலே வாணம் மண்ணிலே சடலம்
கண்ணிலே ஈரம் இன்னுமா வாழ்வு ?
எத்தனை நினைத்தும் உயிர்க்காய்ப் பயணம்
அத்தனையும் ஏப்ரல் 1996... கிளாலிப் பயணம்

# ஏன் இந்தக் கோலம்?

இனிய புத்தூரே! ஏனிந்தக் கோலம்
தனிமையில் பிரிந்தெனைத் தவிப்பதால் தானா?
புதுமைகள் பலகொண்டு பொலிவுடன் நின்றாய்
புதுவைக் கவிஞனைப் பிரிந்து பொங்கிய
பெருமூச்சா?
இனிய புத்தூரே ஏன் இந்தக் கோலம்?
ஞாலம் போற்றும் உன் தொன்மைக் கோலம்
ஓலம் கொள்ளக் காலம் மாற்றியதோ?
சீலம் கொண்டுயர் சிவன் கோவில்
சுத்தம் சுகம்தரும் மிஷன் வைத்தியசாலை
கத்திக் குரல்கொடுத்த குருபரன் கல்வி நிலையம்
விசித்திரக் காட்சிதரும் விநாயகர் ஸ்ரோர்ஸ்
புசித்திடப் பசிதீர்க்கும் சம்பா தேனீர்க்கடை
வண்ணக் கட்டடம் விதானையார் வீடு
பெண்கள் ஓய்வுறும் பீடிக் கம்பனிகள்
பட்டிமன்றம் வாதிட்ட மேடைகள்
கட்டிப் பிடித்துக் கதைத்த நண்பர்கள்
சுத்தித் திரியச் சுதாவின் மண்ணெண்ணெய்
சுவையாயிருந்த புத்தூர்ச் சந்தி
எல்லாம் மல்லாந்து போனது ஐயகோ!
ஐயகோ! இவ்விடம் எவ்விடம்
என்னால் புரியவே முடியலையே
இனிய புத்தூரே ஏனிந்தக் கோலம்?

# சித்திரைப் பெண்ணே!

சித்திரைப் பெண்ணே! சித்திரைப் பெண்ணே!
இத்தரை வாடுது எழுந்துவா முன்னே
முத்திரை பதித்த வீர மண்ணின்று
நித்திரையாகுது நிமிரட்டும் உன்னோடு

சுற்றித் திரிந்த வீதிகள் யாவுமே
சோலை யிழந்த குயிலாய்ப் பாடுது
கட்டி வைத்த கூட கோபுரம்
மட்டில் மாசொடு உற்றாரைத் தேடுது

பெட்டி படுக்கை வட்டிப் பணம்
கட்டிச் சேர்த்த எல்லா மிழந்து
தங்கத் தரிக்கத் தனியிட மின்றித்
தமிழினம் அழியுது தூக்கிடுவாய் நீ

உற்றார் உறவினர் ஒன்று சேர்ந்திடப்
போற்றும் உரிமைகள் எம்மவர் பெற்றிட
வருத்தும் வாழ்வு வயங்கி மடிந்திட
வணங்கினோம் உன்னை வந்திடு சித்திரையே.

( 1997 ஏப்ரல் )

# அன்னை மண்ணே

என்னையீன்று முத்தந்தந்து
அன்பாய் நிதமும் அணைத்தவளே
முன்னைப் பெருமை முனைப்பாய் காட்டி
என்னை நேசி என்றவளே

ஆண்ட தமிழன் குலமே யென்று
ஆளச்சிரித்து நின்றவளே
கட்டப் பொம்மு கதையைச் சொல்லி
கட்டிக் காக்க வைத்தவளே

சுதந்திரத்தின் காற்றுத் தேடி
சுவாசிக்க எழுந்தவளே
சரித்திரத்தில் உயர்ந்து நின்று
தரித்திரத்தில் ஏன் தரித்தாய்

அன்னையாகி அணைத்தவளே
என்னையீன்ற ஈழமண்ணே
கன்னித்தாயே யாழ் மண்ணே
கவலையென்ன கூறிடுவாய்

முன்னைப் பழமைச் சிறப்பெல்லாம்
நினைத்துத் துயரம் கொண்டனையோ
இன்ப மைந்தர் தனையிழந்து
அலறித் துடிக்க நேர்ந்ததுவோ

கட்டி வைத்த வளமெல்லாம்
விட்டு விட்டுக் கதறினையோ
வீட்டுக் காவல் தலைவனையே
வேட்டுத் தைக்கத் துடித்தனையோ

மனித உரிமை மீறலெல்லாம்
அத்துமீற அழுதனையோ
மனித மானம் வீதியிலே
மரணிக்கின்ற துயரோ சொல்

குப்பையிலும் மங்காது குண்டுமணி
கொலையினிலும் சாகாது கொள்கைவழி
தப்பா துணைக்காக்கும் தர்மம்
தாயே நீ கலங்காதே,

# வாடகை வீடு

மேகங் கறுத்து மின்னல் மின்னி
மோகங் கொண்டு இடி முழங்கியது
எதையோ எண்ணியெண்ணி எதிர்பார்த்து
விதையாயிருந்த இதயங்கள் மீது இடி விழுந்தது
சதையும் எலும்பும் சிதறிப் போக
சிதையாய் உடல்கள் மண்ணில் மலிந்தன
கொழுத்தும் துயர அழுத்தம் அணைக்க
கொழும்பி லெம்மவர் புகலிடம் தேடினர்
வீட்டில் கூடச் சோபை இழந்து
முராரி பாடக் கசத்தது வாழ்வு
முப்பதாயிரம் முற்பணமாயினும்
மாதமாயிரம் வாடகை பேச்சிலே
காற்று வீசச் சாளர மில்லை
காற்றாடி கண்ணாடி தளபாடமில்லை
ஆறடி யகலம் பத்தடி நீளம்
ஆறுபேர் தங்க அறைமட்டும் தான்
கொட்டும் மழையில் கப்பல் விடலாம்
குந்தியிருந்தே பொழுது போக்கலாம்
வீட்டுத் திருத்தம் கேட்டும் பார்த்தனர்
வட்டிக்குக் கொடுத்ததால் அட்வான்சும் இல்லையாம்
பிழைக்கத் தெரிந்தவர் பிழைத்துக் கொள்ளட்டும்
இழைத்துக் கொண்டவர் எழுந்து நிற்கட்டும்.

தினக்குரல்
1997-07-21

# சுதந்திரம்

தங்கள் தங்கள் கடமையது
திங்கள் தோறும் தொடர்கிறது
எங்கள் நாட்டில் திரிவதற்கே
அடையாள அட்டை ஆவணங்கள்

தடைகள் போட்டுத் தடவல்கள்
தெருவில் மானம் காற்றோடு
உடையுள் கூட உண்டென்று
ஒளித்துப் பார்ப்ப தெந்நாட்டில்

பிறந்த நாட்டில் வாழ்வதற்கே
பதிவு செய்ய வேண்டியதாம்
பதிவு செய்தும் பின்னிரவில்
உதையும் சத்தம் கதவினிலே

ஒழுங்காய் உறங்க முடியவில்லை
கொழும்பில் கூடப் பெருந்தொல்லை
இதுவும் எங்கள் நாட்டினிலே
எமக்குக் கிடைத்த சுதந்திரம்தான்.

சஞ்சீவி
1997-09-06

# நண்பனுக்கு ஓர் மடல்

ஆருயிர் நண்பா !
நேராக உன்னைக் காணாது
நித்தம்....
நெஞ்சினில் அழுத்தம்
மனதின் சுமைகளுக்கு
முற்றுப் புள்ளி வைக்க
அன்பு மடல்தானே
கண்ட மிச்சம்

பூவும் காயும் பூத்துக் குலுங்கும்
நந்த வனத்தில் நாமிருவர்
குந்தியிருந்து கதைகள் பேசி
மந்திகள் போலே சல்லாபம் செய்தோம்
குடியும் சிகரெட்டும்
சுடச்சுட வடையும்
சுவையாயிருந்த வாழ்வின் சுகம்
இன்று...
வன்னிக் காட்டில்
வசந்தம் தேடியலைகின்றேன்

ஒன்றாய்ச் சேர்ந்து
A/L படித்த
ஐடியல் கல்வி நிலையம்
சுற்றுலா வேளை குந்தியிருந்த
மணற்காட்டு மண்மேடு

ஒளித்திருந்து படங்கள் பிடிக்க
இதமாயிருந்த சவுக்கங்காடு
எல்லாம் எண்ணி
இதயம் கனலாய் வெடிக்கிறது

பட்டம் பெறக் கைகொடுத்த
பல்கலைக் கழகம்
விரிவுரைக்கு வரமுடியாமல்
எரிமலையாய்க் குமுறும்
என் உள்ளம்
என்றுதான் ஆறுமோ ?

எண்பத்தி யேழில்
முதலைக் ஹெலியின் கோழைத்தனம்
இறந்துபோன எந்தன் தந்தை
இடுப்பளவில் காயம்
அவ்வளவில் தப்பிவிட்டேன்
எல்லாம் நீயறிந்ததே
உடையில் மறையும் அங்கம்
சிலவேளை...?
வேறொன்றுமில்லை
அதனால்தான் தயக்கம்

எனக்காகக் காத்திருந்த
ஆருயிர் வாசுகிக்கும்
திருமணம் முடிந்துவிட்டதாய்
கேள்விப்பட்டேன்
நீதான் எழுதவில்லையே

ஆருயிர் நண்பா !
நேராக உன்னைக்
காணாத போதும்
நிம்மதிக்காய் ஓர்மடல்
நீ மட்டும்...
"திருமுகம்" காட்ட மறந்துவிடாதே
மீண்டும் தொடரும்...



# போதும் என்
# கொழும்புப் பயணம்

பயிற் றொன்பதோ டேழுசே ரரண்டாடி
பேரிருள் சூழ்ந்ததென் வாழ்வு
வயிற்றிலோ ரெரி முட்டினாற் போலவே
வாழ்நாளோர் திங்கள் வீணேயானது
குயிற்றிய செம்மணிக் குன்றிய தீபமாய்க்
குமுறியே உள்ளொளி குறைந்துபோனதே
பயிற்றிய மாணவர் பல்கலை எண்ணியே
பாடுபலபட்டிடப் பொழுதும் நீண்டதே,

சீதனக் கொழும்பிலே சோதனைக் கேகியே
சந்தித்த சோதனை யாயிரமாயிரம்
வேதனங் கெட்டொரு வேதனை பெற்றுமே
வெந்திட வாழ்வினில் வீசுமோ தென்றலும்
போசனமாகிய யோசனைப் படுக்கையில்
பன்(னி)ரண்டு போகவே கண்களும் தூங்குது
நயனங்கள் மூடிட நீள்கத வுதைத்தவர்
நம்மவ ரட்டைகள் நாடியு மழைக்கிறார்.

கடலும் இரங்குமோ கப்பலும் ஓடுமோ
கனவுகள் வந்தலை மோதியே போனது
உடலுரமேறிட உணவுதான் ஆகுமோ
எங்களின் கைகள் பணமரப் பயிரோ
ஆடலுமாயினும் ஓடுமோ வானமும்
எழுந்தது வினா "இதுவுமோர் நாடா?"
தேடலில் நானும் "தேசம் இரண்டாச்சோ?"
ஆதலில் இந்தச் சுணக்கம்தான் ஏனோ?

ஆடியேழ் மூன்றில் ஓடிவா வென்றார்
ஓடும் விமானம் யாழ்போகச் சொன்னார்
நாடியோர் செய்தி நமக் களித்தாரா
நானூறு ரூபா நாசமாய்ப் போச்சு
ஓடி (இ)ரட்மலானை ஓய்ந்தே விட்டேன்
இருபத்தி நாலு உறுதியாய் என்றார்
அடித்தேன் தொலைபேசி இருபத்து மூன்றில்
இருபத் தெட்டு எதிர்பார்ப்பு என்றார்,

கட்டுத் தாள்கள் கொட்டி யாச்சு
காலமோர் மாதம் கழிந்து போச்சு
விட்டு வந்த விரிவுரை வீடு
வந்தென் னுள்ளம் வருத்தியு மென்ன
தொட்டுத் தொட்டுத் தொலைபேசி எடுத்தும்
தந்தது எல்லாம் தாமதப் பேச்சு
பட்டுக் களைத்தேன் பட்டணம் வேண்டாம்
போதுமென் கொழும்புப் பயணம் போதும்.

(1997 யூன்)



# வெள்ளைப் புறா

நல்லைக் கந்தன் பூங்காவில்
மலர்தூவும் வான்வெளியே
இல்லைத் துன்பம் என்றேயெம்
நெஞ்சில் தூவ வருவாயா ?

செந்நீரில் தினமாடிக்
கண்ணீரில் குளிக்குமிந்த
செந்தமிழர் நிலைமாற
சேதியெப்போ நீ தருவாய் ?

மணவாழ்வின் அமைதிக்காய்
கோயில் குளமலைபவர்கள்
மனமார வாழ்ந்திடவே
வெள்ளைப்புறா பறக்கட்டும்.

# சுடுகாடு

வலைபோட்டு மீன்பிடித்து
விசிலடித்து வீதியிலே
செல்லுகின்ற கன்னியரை
விழியாலே சாடைசெய்து
வீற்றிருக்கும் "ஊறணி மதகு"..........
எத்தனை வாலிபரின்
உள்ளத்தைத் தைக்கிறது.

ஒய்யார நடை நடந்து
மாடாடு மேய்த்து வரும்
அந்திராணைத் தோட்ட வெளி
பாக்கியம் அக்காவின்
மனதிலெரி மூட்டியது.

தந்தானத் தொம் பாட்டு
தொந்தி நடமாடி வரும்
சிறப்பான வீதியிலே
உறவுகளின் உடைவுகளால்
கள்ளுத் தவறணையும்
கண்ணீர் விட்டழுகிறது.

உறைப்பான காற்றடிக்கும்
உப்புவெளி நீர்க்கிணறு
தப்புக்கு இடங்கொடுத்துத்
தலையசைக்கும் ஈச்சம்பற்றை
இளசுகளின் வரவுகளை
எதிர்பார்த்துக் கலங்கிறது.

தலையணையும் பாயும்
தடையென்று தள்ளிவிட்டு
திண்ணையிலே தலைசாய்த்து
தூங்க வைத்த பெரும் வீடு
கொதிக்கின்ற வயிறோடு
குறைப்பேச்சுப் பேசுகின்ற
கொட்டில் குடிசைகளும்
ஒட்டியுறவாட ஒருநாயுமில்லாமல்
இரவெல்லாம் கண்விழித்து
அரவத்தை யணைக்கிறது.

வைகறை வேளையிலே
விழித்தூக்கம் விட்டெழுந்து
ஆள்மாறி யோடோடி
ஒற்றி நீர் அள்ளுகின்ற
நல்ல தண்ணிக் கிணறும்
நம்மவர் எங்கென்று
நீள் மூச்சு விடுகிறதே.

எல்லாமே துயர் மூழ்கிக்
கண்ணீரில் குளிக்கையிலே
ஒன்றுமில்லை என்பரப்பு
இன்றோடு நீண்டதென்று
சுடுகாட்டுச் சுடலைமட்டும்
எடுப்பாக நிற்கிறது.

# பண்பாடு

செக்கச் சிவந்த செவ்வாழை
மூக்குத்தி மூக்கால் இழுத்ததுவே
பூக்குத்தி முடித்த கருங்கூந்தல்
கூர்க்கத்திக் கண்ணால் குத்தியதே
தங்கம் மின்னும் அங்கம்
எங்கும் விழிகள் ஏதுதடை
ஓடும் வண்டி வெகுவேகம்
ஓரங்கட்டி நின்றுவிட்டேன்
குட்டி போட்டும் அவ்வாழை
விட்டு வைக்க விரும்பியதா
கன்னி வலையில் வீழ்ந்தவரும்
எண்ணி யறுபது வயதினரே
உடையுள் கையின் உருவங்கள்
உந்திகீழும் தடவல்கள்
உலகம் சொலலும் தமிழ்ப்பண்பு
கலகம் போடும் கொழும்புநகர்
பாவலர் பாடிய பண்பாடு
பாதியிலேன் இந்த இடர்ப்பாடு?

# ஏது பயன்?

சிந்தனையாம் ஆற்றற் சிறகு வைத்து
முந்தியடித்து முனைப்பாகக் கற்று
பட்டதாரிப் பட்டம் பெற்றும்
வாட்டும் வெயில் வீதியில் அலைபவர்கள்
வெள்ளையுளம் வாட்டும் வெந்துயரம்
வேலையின்மைக்கோர் வழி கிடையாதோ ?

தொண்டுகள் செய்யும் தொண்டர் கூடி
வேண்டுகோள் சங்கமாய் விடுத்தனர் உமக்கே
மீண்டிட வழியென்ன விரைந்து சொல்வாய்
ஆண்டுகள் வீணாய் ஓடுதே யம்மா
போரின் கொடுமை பொசுக்கிடும் வேளை
போராட வைப்பது பெருந் தொல்லையாகும்

வாழ்வின் வெறுமை விரக்தி யழிக்க
வழியொன்று கேட்டு விடைபெறு மிவர்க்கு
சாந்தி சமாதானம் பேசிப் பேசியே
சந்தி வழியக் கைகாட்டி ஏதுபயன் ?

# போரின் கொடுமையில்
# புண்படும் உள்ளம்

மந்தி நடம்தாவி வந்துபாய்ந்து
குந்திடும் காட்டு மரங்கள்கூட
வந்து அந்தரித்த வேளை யெமக்கு
சாந்திய ளித்துச் சுகம் தந்தது
எந்தையும் தாயுமாய் எழுந்துநின்று
முந்தையர் மரபினில் கரம்நீட்டி
சந்தமா யணைத்துச் சுமையகற்றிச்
சொந்தமாயான சோதரா உங்கள்
சந்திக் கடைத்தெருவில் ஷெல்வெடிக்க
உந்தியிலே பசித்தீ வெந்தெரிய
எந்திய பொருள்விட்டு அலைவதனால்
எங்களின் மனமது புண்படுதே.

# தனிமையின் தவிப்பு

கனவுகள் வரும் காட்சிகள் தோன்றும்
விடிந்தபின் மனம் சோர்வினில் மூழ்கும்
முடிந்தவை யாவும் முற்றத்தில் நிற்கும்
இடிந்துபோய் மனம் பலநினைந் தேங்கும்

நித்தம் நித்தம் சலிப்புக்கள் மேவும்
பித்தம் பிடித்துளம் கண்ணீர் மல்கும்
கத்தும் குரல்கள் கற்பனை நிற்கும்
சத்த மற்றிடில் வெறுமையில் மூழ்கும்

உடலும் சலிக்கும் உணர்வுகள் இழக்கும்
உணவுப் பார்சல் சுற்றம் சேர்க்கும்
உண்ண மறுத்தும் உளமதை ஏற்கும்
கொண்டவர் நாட மண்ணது நுகரும்

தொழிலும் கசக்கும் தொந்தர வாகும்
தொழிலர் பலரகம் நோக்கிடு மென்மனம்
கூட நின்றவர் குடும்பம் கதறும்
ஓடப் பலமைல் மனபஸ் துடிக்கும்

கற்றவை கடமைகள் கொண்டு வருத்தும்
கனிந்து நடக்கத் துணிமனங் கொள்ளும்
கவலைகள் கக்க நிலைமைகள் தடுக்கும்
அவலங்கள் யார்க்கும் எனமனந் தேறும்

சிக்கித் தவிக்கும் சிந்தனைச் சிதறல்கள்
தக்கி நிற்கும் தொண்டைக் குழியினுள்
தள்ளவும் முடியலே மெள்ளவும் முடியலே
தந்தை போனதும் என்தனிமையின் தவிப்பிது.

# பேச்சும் பதவியும்

பட்டம் பதவியைக் கட்டிப் பிடித்து
போற்றும் பெருமைப் புகழின் மேவினீர்
சட்டக் கதிரையில் ஒட்டி யிருந்தே
சார்ந்த கடமைகள் செய்து முடிக்கிறீர்
சுட்டி நின்று சுவையாய்ப் பேசியே
சேரும் உயர்வின் வழியைச் சொல்லுறீர்
எட்டி நின்று உரிமையாய்க் கேட்டதும்
ஏனோ நீரும் தட்டிக் கழிக்கிறீர் ?

கொஞ்சு தமிழ் வஞ்சியரைக்
கொஞ்சுகின்ற வேளையிலே
விஞ்சுகின்ற இன்பமதாய்
மிஞ்சியது உம் கதைகள்
நஞ்சு மனம் இல்லையென்று
பிஞ்சுமனம் நம்பியது
அஞ்சும் மனம் கெஞ்சுகையில்
நெஞ்சு கல்லு ஆனதுமேன் ?

பேசத் தெரிந்தால் பேசுவதெல்லாம்
பயனுள்ள தென்றே யாரும் கருதார்
நேசம் நியாயம் நெஞ்சில் கொண்டே
நித்தம் செயலை நிறைவாய் ஆக்கும்
செயலில் பேச்சு சேர்ந்தே நின்றால்
செகமே யுன்னைச் சுமந்து நிற்கும்
வாயின் வார்த்தை யளந்தே பேசி
வண்ணச் செயலில் வலிந்து காட்டும்.

# ஓய்ந்துவிடாது

ஈழத்தாயின் மானத்துக்காய்
ஆடை தரிக்க எழுந்த எவர்க்கும்
வாழ்த்துப் பாடும் எந்தன் பேனா
இறுதி வரைக்கும் ஓய்ந்துவிடாது.

இடையில்... ... ...
துச்சாதனனாய் எவர் வந்தாலும்
பொறுத்துக் கொள்ளத் தருமனல்லேன்
பொங்கியெழுந்தவர் தலைகள் கொய்யும்
சன்னப் பூவாய் சீறிநிற்கும்
எந்தன் பேனா ஓய்ந்துவிடாது.

# எத்தனை சக்தியடி உனக்கு

ஏ... பெண்ணே! எத்தனை சக்தியடி
எனை மயக்கும் புத்தியுனக்கு
என் வீட்டு நினைவைக் கூட
எளிமையாய்ப் பறித்து விட்டு
உன் மடியில் எனைச் சுமக்க
எத்தனை சக்தியடி உனக்கு.
(எத்தனை சக்தியடி)

உண்ணுகின்ற வேளையிலும்
உடன் குறுக்கே வந்து நிற்பாய்
உண்டது போது மெனக்
கண்டித்து எனையி ழுப்பாய்
இழுத்து... ... இதமாகச் சுகம்தர
எத்தனை சக்தியடி உனக்கு.
(எத்தனை சக்தியடி

பண்ணுகின்ற பஜனையிலும்
பக்கத்திலே வந்தமர்வாய்
போதுமுன் பக்தியெனப்
பாதமதைப் பிடித்திழுத்து
உடங்பெங்கும் உசுப்பிவிட
எத்தனை சக்தியடி உனக்கு.
(எத்தனை சக்தியடி)

கம்பஸ் என்றேன் என்வீட்டார்
தம்பி நீ கவனமென்றார்
பெண்ணெவரும் பார்க்காமல்
பண்புடனே வாவென்றார்
மயக்கிடுவாய் நீயென்று
மனதில் நான் நினைத்தேனா?

(எத்தனை சக்தியடி)

நள்ளிரவு நேரமதில்
யாருமற்ற வேளையிலே ...
கள்ளத் தனமாய் உன்மடியில்
கிடந்த கதை யாரறிவார்?
எத்தனை சக்தியடி ...
எனை மயக்கும் புத்தியுனக்கு.

(எத்தனை சக்தியடி)

கண்ணுறங்கும் வேளையிலும்
கைதட்டி யெனையழைப்பாய்
அழைத்து... என்கையால்
உன்முகத்தை வருடவைப்பாய்
சிந்திக்கின்... சிலவேளை
பித்தத்தைத் தலைக்கீவாய்.

(எத்தனை சக்தியடி)

இத்தனை சக்தி உனக்கென்று
எண்ணி நான் பார்த்ததில்லை
ஓ ஓ ...... பரீட்சையெனும் பாதகியே
உன்னிடமா இச்சக்தி?
இறுதி நேர முத்தமதை
எனக்கீய மறுத்திடாதே.

1993 நவம்பர்
(3rd Year Study Leave)

# புரிந்திடுங்கள்

புண்பட்டுப் பண்பட்டுக்
கண்படவே நான் வளர்ந்தேன்
வெண்பட்டு விரித்து வாழும்
மஞ்சத்திலே நான் கிடவேன்
வேதனையின் சோதனையில்
சாதனையே நான் படைப்பேன்
பூதலத்தில் புதிதென்று
பெருமை கொள்ள நான்வாரேன்
துடிக்கின்ற இளமையிலே
படிப்பதனை நான் விடுக்கேன்.

எரிகின்ற நெருப்பதிலே
எண்ணெய்தனை வார்த்தாலும்
புரிகின்ற நிலையில் நான்
புரிந்து கொண்டேன் அத்தனையும்
காசு பணம் பொருளுடனே
மாசற்ற வாழ்வெனினும்
கடமை நிலை கௌரவம்
மடையனல்ல மறந்து விட.

"இளமையிற் கல்" என்று
இருந்தவர்கள் சொன்னார்கள்
" இதற்கேது அருகதை"
என்றவர்கள் ஒருசிலர்
நம்பாத நாதரெல்லாம்
எம்பி என்றழைக்க
நம்பிடும் நிலையிலிந்த
நம்பியில்லைப் புரிந்திடுங்கள்.

1992

# வெறுப்பு

விருப்பைத் தான்
வெளியில் சொல்லத்
தடங்கலென்றால்
வெறுப்பைக் கூட
மனதிலிருந்து
வெளியில் தள்ள
முடியவில்லையே.

# மணம்

சமாதான மேடையிலே
மணம் முடிக்க ஆசைகொண்டேன்
காதல் நாயகியோ...
கைப்பிடிக்க மறுத்துவிட்டாள்
மனமோதல் தொடங்கியதால்
மணம் தள்ளிப் போகிறதே
சீர்வரிசை நாயகியோ
தீர்வுத்திட்டம் கேட்கின்றாள்.

சஞ்சீவி
1997-11-08

# பொறுப்புக்கள்

இதமான சுமைகள் தான்
　　ஏற்றிடும் பொறுப்புக்கள்
விதம்பெற்றே வீறு கொள்ள
　　வழி சமைக்கும் பொறுப்புக்கள்.

கடமை கண்ணியம் கௌரவம்
　　காட்டியே தந்திடும் மேன்மைகள்
அடிமையா யாகிடா துழைக்கவே
　　ஆக்கிடும் அவனியில் எம்மையே.

இன்னல்கள் வந்துற்ற போதிலும்
　　எழுச்சிகள் கண்டிட வைத்திடும்
உழைத்திடும் ஊக்கமும் நல்கிடும்
　　ஒழுங்கினைக் கூடவே தந்திடும்.

நெகிழ்ந்திடும் பண்புகள் வந்திடும்
　　நேயமும் நெஞ்சினில் தந்திடும்
அஞ்சாத உள்ளமு மாயிடும்
　　துஞ்சாது நேர்வழி வைத்திடும்.

இலட்சியப் பாதைகள் வகுத்திடும்
　　எளிமையாய் வாழவே பழக்கிடும்
பொறுத்திடும் பொறுமையும் சேர்த்திடும்
　　பெறுாப்பெமைப் பக்குவ மாக்கிடும்.

பொறுப்பினைத் தட்டிக் கழித்தவர்
　　பெயர் விளங்கிட லரிதாகுமே
வெறுக்காதே மனமே! உவந்துநீ
　　பொறுப்புணர் பொழுது புலருமே.

(1990)

# படம்பார் பாடம் படி

கூண்டுக் கிளியொன்று
　கூண்டுவிட்டுப் பறந்தாற் போல்
கொண்டாட்டம் கொள்பவரே
　கொஞ்சமேனும் சிந்தியீரோ ?

பன்னிரெண்டு மணிமேலும்
　படமென்ன சொர்க்கமா ?
பயிலும் சிறுவர் பள்ளிப்படிப்பு
　பாழாக நீரும் காலாகலாமோ ?

படம்பார் பாடம்படி
　பாலபோதம் மனதில் வைத்தாயோ...?
போற்றும் புகழில் ஓங்கும் யாழில்
　பரந்த கல்வி யழித்திடாதீர்.





# இனியில்லை றாகிங்

வாழ்வின் தீபமே! வரப்பிரகாஷே
விசும் தென்றலில் வந்ததோர் சேதி
வாடாத மலர்கூட வாடிப் போனதே
வையகம் யாவும் துயர்க்கடலானதே
ஆரென் றுன்னை யறியாத போதும்
என்னுள்ளமுருகி யனல் மெழுகானதே
பேரென்ன வென்று பின்னேதான் தெரிந்தேன்
பெற்றோர்க்கு நீ வரப்பிரசாதமே.

நாடிச் சென்றுயர் கற்று மேம்படவே
ஓடிச்சென்றி ரையாகிப் போன தென்னே?
ஆடியடங்கும் அனுபவ வாழ்க்கை
ஆடமுன் னடங்கிப் போனது மென்னே!
தேடிப் பிடித்துன்னைத் திக்காட வைத்தவர்கள்
நாடிவரும் காலன்தன் றூதுவரோ?
ஓடிச்சென்றிட்ட உன் ஆத்மா சாந்திக்காய்
ஒருறுதி கொள்வோம் "இனியில்லை றாகிங்"

# புதிய பரணி

அண்டிப் பழகாது
பெண்முகம் நோக்காது
மண்டி யிருந்து விட்டால்
உண்டோ நாணம் "இவன்"
பெண்ணே பெண்ணென்று
தூண்டிக் கதை பேசி
ஈண்டகிலம் பரப்பிடுவர்.

பெண்வாடை தொற்றாத
மண்வாசக் கோழை யென்று
மகுடங்கள் சூட்டிடுவர்.

கள்ளமில்லா மனத்தோடு
உள்ளன்பு கொண்டொருவர்
சோதரமாய்ச் சேர்ந்து விட்டால்
அநாதரவாய்க் கதை சொல்வார்.

ஓர விழிப் பார்வையிலே
உருகி வழிகிறாண்டா
ஒய்யார நடையதிலே
உளமிளகிப் போனான்டா
பின்னல் எடுவையிலே
பின்னின்று சுழல்கிறாண்டா
மாங்கனியாம் தேன்குடத்தில்
ஆங்காசை கொண்டா 'னவன்'
கண்ணில் பார் காமம் சொரிகிறது
ஈண்டிதைக் கருவாக்கி
ஒரு நாவல் எழுதிடுவர்.

நா வளையும் என்பதனால்
நயமாகக் கதை பேசும்
நய வஞ்சகர் செயலொழிய
நாமொரு பரணி பாடுவோம்.

# களவு

இல்லத்தில் உரியவர் இங்கில்லை என்று
அகம் மகிழ்ந்தாட பெருந்
தொல்லைகள் தீர்ந்தனம் என்றே மனம்
குழைந்து குழைந்தாட அயல்
வீட்டில் நுழைந்ததே ஆனந்த மென்று
கைகள் இசைபோட கொடும்
மட்டி மடையராம் கொள்ளையர் கூட்டம்
களவு எடுத்திருந்தனரே.

இடம் பெயர்ந்ததும் "எம்மில்லம் என்னாகும்"
என் றவர் திண்டாட பெரும்
தடமெனத் துயர்க் கடலோங்கி யவர்
மன மலைபாய நம்
சுற்றமும் உற்றமும் உண்டென்று மனச்
சுமை கலைந்தோட பல
கற்றுமே "எம்மவர்" என் றுணராது
கள வெடுத்திருந்தனரே.

வந்த பகை தம் வழித்துணை போக
எண்ணி நின்றனரோ தம்
வாசல் மட்டு மொரு தென்றல் வீச
எண்ணியிருந்தனரோ அத்தி
வாரக்கல் ரீவி உள்ளாடை
தன்னையும் விட்டனரோ யாவும்
தீர அறிந்தவர் போலே யவர்
கள வெடுத்திருந்தனரே.

மாந்தரோ இவர் மந்தியரோ நல்ல
மனமற்றிடு பேதையரோ மன
முந்தியதோ சொந்தச் சோதரர் என்
றுணர்ந்தனரோ உயர்
வாழ்வோங்கி யிருப்பரோ நீசர் பிணி
நீங்கி வாழ்வரோ வரும்
“ ஊழ் ” என்றுணர்ந்தனரோ ஆயினும்
கள வெடுத்திருந்தனரே.

# புல்லாகிப் போகுதையா புகழ்வாய்ந்த கல்விநிலை

புல்லாகிப் போகுதையா
    புகழ்வாய்ந்த கல்வி நிலை
புண்ணியம் உமக்காகும்
    போற்றிட வாருமையா.

தரப்படுத்தல் சட்டமதால்
    தமிழர் நிலை மோசம்
அறப்படித்தும் கண்டதென்ன
    ஆவது ஒன்றுமில்லை.

கற்றவரும் புலமையென்று
    கடல்கடந்து செல்கிறரே
கற்றதுவும் இனிமையென்று
    கைவிட்டு நிற்கிறரே.

பலதும் படித்து வந்த
    பள்ளித் தலைவர் கூட
பதவி தள்ளி விட்டுப்
    பறந்தோடிச் செல்கிறரே.

இதமாய் இங்கிருந்து
    எற்றிக் கற்றவைகள்
இங்கிதமாய் எம்மவர்க்கு
    அளித்திட வேண்டாமோ?

பட்டம் பதவியென்று
    கட்டிப் பிடித்தவர்கள்
கற்றே யதை முடிக்கக்
    காலம் தான் விட்டதுவோ.

# ஆணுக்கும் கற்பு

அவள் கற்பிலியென்று
அழகுப் பட்டம் சூட்டும்
ஆணினமே!
அதற்கு
நீ தான் காலென்று
ஒரு கணம் உணர்ந்துகொள்
உனக்கும் கற்புண்டு.

# மனிதாபிமானம்

அவலங்கள் நிறைந்த
எங்கள் மண்ணில்
மனித உயிர்கள் தான்
மரணிக்கின்றன வென்றால்
மனிதாபிமானமும் மரணிக்கின்றதே.

# சீதனம்

சீர்கெட்ட வாழ்வினிலே
சீர்வரிசை சேர்ப்பதற்கு
சீதனமும் சாதனையாம்
சிலர் வாழ்வு வேதனையுமாயிடுமோம்.

சாதி மதங் கடந்து
சேர்ந்திட்ட பெருங்காதல்
வீதியோ டழிகிறது
வழியிந்த ரொக்கம்தான்.

சோம்பித் திரிகின்ற
சோம்பேறி யாடவரை
ஊம்பாது உழைத்துயர
ஊக்குவதும் இதுவேதான்.

வறுமைப் பெண் வீட்டில்
வெந்திடும் பெருமூச்சு
அருமை வாழ்விழந்தாள்
அதற்குமிப் பரிசம்தான்.

விதவை வடிவிழந்தோர்
வையகத்தில் வாழ்வதற்கு
உதவி தனை நல்கும்
உத்தமரும் இவரேதான்.

மாடாய் உழைத்துயரும்
ஆடவர்க்குப் பின்னடைவு
ஓடாய்த் தேய்ந்தவரும்
இழைப்பதற்கு இதுகாலே.

பலதும் படித்துயர்ந்து
பண்பாடு கொள்வதற்கு
சிலரை ஊக்குவிக்கும்
சிற்பியும் சீதனமே.

சொர்க்கத்தில் நிச்சயித்த
கல்யாண மாலையின்று
ரொக்கத்தில் நிச்சயமாம்
நிலைகெட்ட காலமாச்சே.

சாதனையும் சோதனையும்
சீதனமே சேர்த்திடினும்
சீர் கொடுப்போர் வாங்கிடுவோர்
சிந்தித்தே முடிவெடுப்போம்.

# எங்கள் மண்ணின் அடிமை விலங்கு என்று தெறிக்கும் அன்றேயாகும்

கோழி குஞ்சுக்கிரையை நல்கும்
கறையான் மண்ணைப் புற்றுக்கிழுக்கும்
எறும்பு நிரையாய் ஊர்ந்தே செல்லும்
எலிகள் வளையுள் ஊடல் கொள்ளும்
சேவல் கூவிச் சிறகு கொட்டும்
ஆவல் கொண்டு கிளிகள் பேசும்
சிட்டுக் குருவி சிந்து பாடும்
கேட்டு வண்டு ராகம் போடும்
சோலைக் கிளிகள் கீதம் பாடும்
வேலைத் திரைகள் மகிழ்ந்து நிற்கும்
ஆலை கடைகள் எழுந்து நிற்கும்
சாலை யாவும் சோலையாகும்
இரவுகூட உறக்கம் கொள்ளும்
அரவம் நீங்கி அமைதி ஓங்கும்
தடைகள் தெருவில் தானே உடையும்
உடைகள் ஒய்வில் இன்பம் துய்க்கும்
எங்கள் மண்ணின் அடிமை விலங்கு
என்று தெறிக்கும் அன்றேயாகும்.





# காதல்

விலை கொடுத்து வாங்க முடியாத
நிலையான இன்பம் காதல்
மலையாக எம்வாழ்வு செழித்தே யோங்க
சிலையாக வந்தேத்தும் இன்பக் காதல்.

அழியாத பொருளாகத் துள்ளும் காதல்
நெளியாது வளர்ந்திடும் அந்தக் காதல்
காலமுங் கடமையுங் கல்வியுங் கொண்டு
ஞாலத்தில் ஓங்கிடும் ஜீவன் காதல்.

பரிந்தே தம்மனமெலாம் இணைய வைக்கும்
புரிந்துணர் வளித்திடும் மேன்மைக் காதல்
தெரிந்தே தம்வாழ்வினைத் தேற வைக்கும்
விரிந்திடும் அன்பேதான் உண்மைக் காதல்.

# எரிமலை

கள்ளங் கபடமற்ற
உள்ளத்து உறவுகளை
சில ...
நச்சுப் பாம்புகள்
கொத்திக் கிழிக்கப்
பார்க்கின்றன
எரிமலையாய் வெடிக்கும்
என் உள்ளக் குமுறல்கள்.

ஏ ... பாம்பே !
நீ ...
அஞ்சச் செய்யும்
நஞ்சுப் பாம்பா ?
இல்லை
நளனைக் காத்த
கார்க்கோடகனா ?
எல்லாம் ...
எரிமலையாய் வெடிக்கும்
என் உள்ளக் குமுறல்கள்.





# அறியாயோ ?

கொவ்வைச் செவ்விதழ் வாயாளே - என்
கொற்றமறிந்த குணவாளே
பாற்குடம் போலிரு தனவாளே - நின்
பாதச் செம்மையைப் பண்ணிடுவாய்
பாற்கடலிந்த பிரான் நானே - இளம்
பாலகி பருகிட வாவேண்டி
கச்சைக் குள்ளிராத் தனவாளே - நின்
காந்தன் நான்தான் அறியாயோ ?

# முடியுமென்றால் காத்திருப்பாய்

சித்திரப் பூவிழியே
சின்னமலர்க் காதழகே
முத்துச்சரப் பல்லழகே
முழுவதன மதியழகே
மின்னுகின்ற மெல்லிடையே
நன்னுதலின் பிறையழகே
தேசிப்பழ மேனியளே
தேசமெங்கும் நிலைத்தவளே
தாகங்கொள்ள வந்தவளே
தாகமேதும் எனக்கில்லை
பண்புடனே பணிகின்றேன்
பண்பாடு கொண்டதனால்.

இதயமது மறுக்கிறது
இடமில்லை என்றல்ல
மனமது மிரள்கிறது
மனமில்லை என்றல்ல
குடும்பமது குறுக்கிடுது
குலம்தாழ்வு என்றல்ல
என்னுள்ளம் தயங்கிறது
எழில்குறை வென்றல்ல
பாவிமனம் பதைக்கிறது
பரிசமிலை யென்றல்ல
தனயன் மனமேங்கிறது
தந்தை தடையென்றல்ல
காலமிட்ட கட்டளை
கடமையெனைத் தடுக்கிறது
காலம் பதில் சொல்லும்
காத்திருப்பாய் முடியுமென்றால். 1992



## வாடா(ே)த பூவே!

பூவே ! என் இந்த வாட்டம்
புயல் கிளம்பி உனை மூடியதோ
பூவிலைக்குள் முகம்புதைத்த உன் தோற்றம்
பலர்காணச் சிலர் செய்த சதியோ.

வாடாத மலராகப் பூங்கொடியில் நீயிருக்க
சூடாத மலரெல்லாம் சூடியதாய் யார் சொன்னார்
பீடாகி உன்வாழ்வு சிதையு மென்றறியாரோ
கேடான நிலை வந்தால் கைகொடுக்க
யார் வருவார் ?

## மறந்திடு மங்கையே!

மறந்திடு மங்கையே
எனை மறந்திடு
சிறந்திடும் என் வாழ்க்கையை
சிதைக்கவா பார்க்கிறாய்?
தொடர்ந்திடும் என் வாழ்க்கையில்
சோகங்கள் ஏராளம்
சோகங்கள் குறைந்தாலும்
கடமைகள் என்பாரம்.

(மறந்திடு ...)

உனை ...
சந்தித்த வேளையில்
சிந்திக்கவில்லை நான்
உன் ... ... புத்தி
மந்தித் தனமானதென்று
பிந்தித்தான் தெரிந்து கொண்டேன்
ஆனாலும் மன்னித்தேன்
ஏனென்றால் ... ...
வாழ்க்கை யரங்கத்தில்
வட்டமிடும் நிகழ்வென்று
மன்றாடிக் கேட்டேன்
எனை நீ ...
மறந்திட வேண்டுமென்று
ஆனாலும் ... ...
புரியாமல் என் வாழ்வில்
பொறியாகத் தொடர்கின்றாய்

(மறந்திடு ...)

பட்டங்கள் வாங்கவென்று
பல்கலைக்கழகம் செல்ல
திட்டங்கள் போட்டெனைத்
தொடர்ந்ததில் நீயுமொருத்தி
அத்தனை பேரும் என்னிலை புரிந்து
தம் ... ...
கற்பனை கலைத்து விட்டார்
ஆனால் ... நீயோ ...
கற்பனை வளர்த்து - என்
கௌரவம் கெடுத்து
தொழில் பற்றையும் வற்றவைத்தாய்
இத்தனை கூறினேன்
இன்னுமா தொடருவாய்?

(மறந்திடு ...)
1990



" ஒருவனைப்பற்றிப் புரிந்து கொள்ளாமல்
நடப்பதே சமூகம் விடும் தவறாகும்: அதிலும்
புரிந்தும் புரியாததுபோல் நடப்பது
பெருந் தவறாகும். "

ஸ்ரீ மீனாட்சி அச்சகம் — நல்லூர்.